# ஆதிகோவிலடி - வல்வெட்டித்துறை - 25.02.2017

தற்காலம் ஸ்ரீலங்கா என அழைக்கப்படும் இலங்கைத் தீவானது ஈழநாடு, இலங்காபுரி, இரத்தின துவீபம், சிங்கள துவீபம், தப்ரபேன், சிலோன் சைலான், செரண்டிப், லங்கா என பல பெயர்களில் வரலாற்றுக் காலங்களில் அறியப்பட்டிருந்தது. இவ்விலங்கைத் தீவின் வடபகுதியில் இந்து சமுத்திரத்தில் தீவின் சிகரமென அழைக்கப்படும். யாழ்ப்பாணம் வீணாகானபுரம், வடவிலங்கை. சிங்கை நாடு அல்லது சிங்கை நகர், மணலை அல்லது மணற்றி, மணிபல்லவம், உத்தரதேசம், தமிழ்ப்பட்டினம், நாகதீபம், நாகநாடு, சம்புத்தீவு, ஈழம் எனப் பல பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. தென்னிந்தியாவின் கோடிக்கரை, நாகபட்டினம் போன்ற கரையோரப் பட்டினங்களையும் இலங்கையின் வடபகுதியினையும் பிரிப்பது பாக்கு நீரிணையாகும். இப்படியான நீரிணையால் அணைக்கப்பட்டு அமைந்திருப்பதே வல்வெட்டித்துறையாகும்.

இவ் வல்வெட்டித்துறையின் சிறப்புக்கள் பற்றி உடுப்பிட்டி சிவசம்பு புலவர் (வல்வைக் கலித்துறை) நீர்வேலி திரு.ச.சிவப்பிரகாசபண்டிதர் (1892ல் எழுதிய கலிவெண்பா), வல்வை வைத்தியலிங்கப் புலவர் ( ) போன்ற போன்றோர் கவிதை வடிவில் பாடியுள்ளனர். இவர்களில் அநேகமானோரின் கருத்துப்படி ஆதியில் இவ்வூரில் குடியேறியவர்கள் ஊர்க் காவலுக்காக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட போர் வீரர்களாவர். இவ்வீரர்கள் கடற்படை, தரைப்படை இரண்டிலும் சேர்ந்திருந்தனர். இந்தியாவிற்கு சென்று பிரபந்தங்கள் கவிகள் பாடி பரிசில்கள் பெற்ற உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் தனது வல்வைக் கலித்துறையில் எம் ஊரவர்களை “ஊர்க்காவலர்” எனக்குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண வைபவகௌமுதி” எனும் வரலாற்று நூலின் 16ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பறங்கியரை வெற்றி கொள்ள இந்தியாவின் தஞ்சாவூர் நாயக்கன் ஒருவன் போர்தொடுத்த போது அவர்களுக்கு உதவிபுரிய வல்வெட்டித்துறையில் பாளையமிட்டிருந்த சமரபாகு தேவன் என்ற தளபதியினால் வழிநடத்தப்பட்டு படை சென்றதாக அறியக் கிடைக்கின்றது.

யாழ்ப்பாண வைபவ விமர்சனம்” எனும் நூலில் தஞ்சாவூரிலிருந்து படையினர் வந்த கரையோரத் தலைவன் அதாவது “கல்லிடைத் தேவன் என்பவனது படையணி பருத்தித்துறையில் முகாம் அமைந்திருந்த காலத்தில் தனக்கு துணையாக இங்கிருந்த, அதிகம் போராடும் குணமுடையோரான மீன்பிடிகாரருடன் தங்கியிருந்து போர்த்துக்கேயரை தாக்கும் நோக்குடன் புறப்பட்டதாகவும் தெரிய வருகிறது. பிற்காலத்தில் சங்கிலி மன்னனுடன் முதலிமார்கள் போராட சங்கிலி மன்னனுக்கு உதவியாக “வருணகுலத்தான்” எனும் கரையாரத் தலைவனின் கீழ் போராடியதாகவுவும் அறியக் கிடைக்கின்றது.

மேலே குறிப்பிட்ட “கரையயார் எனப்படுவோர் குருகுலத்தார்” எனும் பிராமண குலத்திலிருந்து வந்தவர்களென “சாதி நிர்ணய புராணம்” கூறுவதாக பிரபல ஆய்வாளர் திரு. டி. சிவராம்அவர்கள் கூறியதுடன் வல்வெட்டித்துறை மக்கள் “கரையார்” எனும் குருகுலத்தவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பண்டயகாலத்தில் யுத்தவீரர்களாக இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்களின் பரம்பரையே வல்வெட்டித்துறையின் ஒரு பகுதியாகிய ஆதிகோவிலடியில் வாழ்ந்து வருபவர்கள் என நாம் ஊகித்துக் கொள்ளலாம். ஒரு காலத்தில் மதுரை அரசு நாயக்க மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது அவர்களின் யுத்த வீரர்களாக இருந்தவர்கள் “மறவர்கள் எனவும் இவர்கள் குடும்பசகிதமாக அழைத்து வரப்பட்டு குடியேற்றப்பட்டனர் என்றும் இதனாலேயே மறவர் ஆட்சி எனும் பதம் தோன்ற அவை திரிபுபட்டு வடமறவர் ஆட்சி என்பது வடமராட்சி எனவும் தென்மறவர் ஆட்சி தென்மராட்சி எனவும் அழைக்கப்படுகின்றன. வல்வெட்டித்துறை மக்கள் போர்வீரர்களின் பரம்பரையினர் என்பதற்கு எமது தேசியத்தலைவரது பரம்பரையை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். ஆண் பரம்பரையினர்

1. ஐயங்க தேவர் (சோழ அரசர் காலத்து படைத்தளபதி)
2. கரியதேவர்
3. காராளர்
4. ஐயனார்
5. மாதர்
6. வேலர் - ஐயம்பெருமாள்
7. வேலாயுதர் (அடப்பன் பதவி வகித்தவர்)
8. திருமேனியார் (நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் வல்லை முத்தமாரி அம்மன் கோவில்களின் தர்ம கர்த்தாவாக இருந்தவர்)
9. வெங்கடாசலம் பிள்ளை (சிவன்கோவில் ஸ்தாபகர், கடலில் மூழ்கிய ஆங்கிலேயரின் அத்திலாந்திக் அரசன் எனும் கப்பலை மீட்டெடுத்து பொருள் தேடிய கப்பல் அதிபர்,மற்றும் அம்மன் கோவில் தர்ம கர்த்தாவாக இருந்தனர்)
10. வேலுப்பிள்ளை
11. திருவேங்கடம்
12. வேலுப்பிள்ளை
13. பிரபாகரன் (தமிழீழ தேசியத் தலைவர்)

ஈழத்திருநாட்டில் யாழ் மாவட்டத்தின் வடபகுதியில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வல்வெட்டித்துறை நகரசபைக்கு உட்பட்ட ஆதிகோவிலடி எனும் கிராமம் வல்வை வடமேற்கு கிராம சேவகர் பிரிவு (J/388)ல் அமைந்துள்ளது. இதன் எல்லைகளாக பின்வரும் தகவல்களை தருகின்றோம்.

i) வடக்கு - பாக்குநீரினை

ii) கிழக்கு - வாடியடி ஒழுங்கை

iii) தெற்கு - பருத்தித்துறை - காங்கேசன்துறை பிரதான வீதி

iv) மேற்கு - தற்சமயம் வல்வெட்டித்துறை இராணுவ முகாமின் கிழக்குப் பகுதி

இது பண்டைய காலத்தில் கப்பல்கட்டும்தளமாக விளங்கியதும் வல்லை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவிலுக்கு கடற்கரையிலிருந்து இட்டுச் செல்லும் வாடி ஒழுங்கை வரையுமே கிழக்கு ஒழுங்கையாக கொண்டிருந்தது. எனினும் தற்போது எமது ஊரவர்கள் வாடி ஒழுங்கையையும் தாண்டி சிவகுருவித்தியாசாலை வரையும் விரிவடைந்ததுடன் மேற்கு எல்லை அமெரிக்க மிசனரிமார் காலத்தில் பாதிரி பங்களா என அறியப்பட்டதுடன் தற்பொழுது இலங்கை இராணுவத்தால் நிறுவப்பட்ட வல்வெட்டித்துறை இராணுவ முகாம் வரை விரிவடைந்துள்ளது. இந் நிலபரப்பின் விஸ்தீரணம் அண்ணளவாக சதுர Km எனவும் தற்போதைய குடித்தொகை குடும்பங்களைக் கொண்டதும் ....... நபர்களையும் கொண்டதாக காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் இலங்கையிலே மிகவும் சன நெருக்கமான இடமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள “காத்தான்குடி” எனும் கிராமமமும் அதற்கடுத்தபடியாக “ஆதிகோவிலடி” யும் என அரச புள்ளிவிபரப்படி பதிவாகியிருந்தமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஆதிகோவிலடியில் குடியிருப்பு நிலம் போதாமையால் வல்வெட்டித்துறை தீருவில் முருகன் கோவிலுக்கு சொந்தமான காணிகளிலும் பெரிய குடியேற்றம், சின்னக்குடியேற்றம் என அறியப்பட்ட இடங்களிலும் சிவன் கோவிலுக்கு சொந்தமான காணிகளிலும் குடியிருப்புக்களை குத்தகை அடிப்படையில் பெற்று வாழ்ந்து வருகின்றனர். அதுமட்டுமல்லாது 2004ல் ஏற்பட்ட “சுனாமி” அனர்த்தம் காரணமாக ஆதிகோவிலடியைச் சேர்ந்த மக்கள் அயல் கிராமங்களான ஊரிக்காடு, காட்டுப்புலம், தொண்டைமானாறு, கெருடாவில், உடுப்பிட்டி மற்றும் பொலி கண்டி போன்ற இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அதுமட்டுமல்லாது கணிசமான குடும்பத்தினர் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

1946ல் எடுக்கப்பட்ட குடிசனமதிப்பீட்டின் படி வல்வெட்டித்துறையில் 5035 இந்து மதத்தினரும் 85 கிறீஸ்தவ சமயத்தவர்களும் மட்டுமே வாழ்ந்துள்ளனர். இதில் ஆதிகோவிலடியில் எத்தனை பேர்கள் வாழ்ந்தார்கள் எனக் கூற முடியவில்லை. ஆனால் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆதி கோலிவடியில் ஒன்பது (9) அல்லது பத்து (10) குடும்ப பரம்பரையினரே வாழ்ந்துள்ளனர்.

ஆதி வைரவர் கோவிலின் தோற்றம் பற்றி ஆராயும் முன் அதுபற்றிய பின்னணியையும் தோனடறுவதற்கான வரலாறுகளையும் கர்ணபரம்பரைக் கதைகளையும் அறிந்து கொள்வது சிறந்தது.

இந்த ரீதியில் ஆதிகோவிலடி மக்களின் பூர்வீகம் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை நாம் முதற்கூறிய பந்திகளில் பார்த்தோம் இதேபோல இது சம்பந்தமான கர்ணபரம்பரைக்தைகளையும் இனி அறிந்து கொள்வோம்.

## கர்ண பரம்பரைக்கதைகள்

இராசா சிவலிங்கம் அவர்களுடன் தொடர்புடையது இவர் இராசா சிவசுந்தரத்தின் ( செல்லச்சாமி அல்லது சேமன் என அறியப்படுபவரது) மூத்த சகோதரன் ஆவார். இவரைப்பற்றிய ஒரு கர்ண பரம்பரைக் கதை வருமாறு.

ஒரு நாள் நள்ளிரவு நேரத்தில் சிவலிங்கம் அவர்கள் கோயில் வழியாக சென்று கொண்டிருக்கையில் கோயிலிருந்து வித்தியாசமான சில சத்தங்கள் கேட்க அவர் கோயிலினுள்ளே எட்டிப்பார்க்க அங்கே வைரவப்பெருமானும் சாமுண்டீஸ்வரி தேவியும் (காளி) உரையாடிக் கொண்டிருந்ததாகவும் அவர் அதனைப் பார்த்த மாத்திரத்தில் அவ்விடத்திலேயே மயங்கி விழுந்து தொடர்ந்து சுகவீனத்தால் படுக்கையிலிருந்து இக்கதையை கூறிய பின்னர் சிலகாலம் வாழ்ந்து பின்னர் இயற்கை எய்தினார். இவ்வாறு மூத்த பிரயைகளில் ஒருவரான திரு தங்கவேலு சுந்தரலிங்கம் அவர்கள் தான் சிறுவயதாக இருக்கும் போது அறிந்து கொண்தாக கூறினார்.

இன்னொரு மரபுக்கதை

திரு ந.சிவரட்னம் (Banker - Jeyam) அவர்கள் தயார் நடராசா வள்ளியம்மாள் மூலமாகவும் திரு த.சுந்தரலிங்கம் தமது பாட்டி மூலமாகவும் அறிந்ததாகவும் பின்வரும் மரபுக்கதையை கூறினர்.

நடராசா வள்ளியம்மையின் பேர்த்தி (தாயாரின் தாய் - அம்மம்மா) அவர்களிடம் ஒருநாள் அவரது நண்பி வீட்டுக்கு வந்து “மச்சாள் உன்ர அட்டியலை தா நான் நாளைக்கு திருப்பித்தாறன் எனக்கூறி முன் இரவில் அட்டியலை வாங்கிச் சென்ற பின்னர் அதே நாள் பின்னிரவு அவர் முன்தோன்றி நான் உன்னை ஏமாற்றி விட்டேன் என நளினத்துடன் நடனமாட, சந்தேகமடைந்த வள்ளியம்மாளின் பேர்த்திர் அயலிலுள்ள ஆண்களை அழைக்க அவர்கள் வீச்சுவலை கொண்டு அப்பெண்ணை நோக்கி வீசினர். பின்னர் அதிகாலையில் வீச்சுவலையினுள் அகப்பட்ட அப்பெண்ணைக் காணாது அதற்குப் பதிலாக அங்கே ஓர் ஓணான் அதன் கழுத்தில் அக் குறித்த அட்டியலுடன் காணப்பட்டதாகவும் கூறினார்.

இதன் மூலம் அங்கு ஒரு துர்தேவதை நடனமாடியதை அறிந்து கொண்டனர்.

**வரலாறு**

ஆதிகோவிலடி வரலாற்றினைப் பற்றி எழுதுவதற்காக எமது ஊரிலுள்ள பெரியவர்களை அழைத்த போது பின்வருவோர் மட்டுமே வருகை தந்திருந்தனர்.

1. திரு த.சுந்தரலிங்கம்
2. திரு. ந.சிவரட்ணம்
3. திரு தி.ஜெயராஜ்
4. திரு. சு.ஜெயசீலன்
5. திருமதி அ.வினோதிகா
6. செல்வி. பி.பிரதீபா

இவர்களின் முதல் ஆய்வாக ஆதிவைரவர் தேவஸ்தானம் காணப்படுகிறது.

**ஆதிவைரவர் தேவஸ்தானம் - தல வரலாறு**

இப்பகுதியில் வாழ்ந்தவர்களின் கர்ண பரம்பரைக்கதைகளின் படி இவ் ஆலயம் 17ம் நூற்றாண்டளவில் உருவானதாக அறியக்கிடைக்கின்றது. எனினும் இக் கோவில் 1825ம் வருடம் பொது மக்களால் கட்டப்பட்டதாக யாழ் கச்சேரி பதிவேடுகள் தெரிவிக்கின்றன. இருந்த போதும் இப்பதிவு காலங்கடந்த ஒன்றாக இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

ஆதிகாலத்தில் இக்கோவில் அமைந்திருந்த இடம் வேப்பமரங்கள், புளியமரங்கள், தென்னை மரங்கள், ஆல மரங்கள், நாவல் மரங்கள் முதலியவற்றுடன் கூடிய வனம் போல் காணப்பட்டதாம். இங்கு வாழ்ந்தவர்கள் குருகுலத்தைச் சேர்ந்த போர் வீர பரம்பரையினைச் சேர்ந்தவர்கள் ஆவர். வாய் வழிக் கதைகளின் படி இராக்காலங்களில் சலங்கையொலி, சங்கொலி முதலியன கேட்டதாகவும் இதனால் அச்சமடைந்த ஆனால் இறை நம்பிக்கை கொண்ட அக்காலத்தில் இங்கு வாழ்ந்த ஒரு சில குடும்பத்தினருள் பக்திமானான ஒரு முதியவரின் கனவில் தோன்றி, வைரவப் பெருமான் தன்னை வழிபட்டு ஆறுதல் அடையுமாறு கூறியுள்ளார். இதற்கமைய ஊர்மக்கள் ஒன்று கூடி ஓர் பெரிய நாவல் மரத்தடியில் வைரவப் பெருமானுக்கான சூலத்தினை வைத்து ஆதரித்து ஆசார சீலர்களான மூதாதையர் தொன்றுதொட்டு ஆதரிக்க, ஊர் மக்கள் வழிபட்டு வந்துள்ளனர்.

இக்குறிப்பிட்ட மூதாதையர்களின் பெரியவர்கள் சின்னவர் மற்றும் சந்திரர் என அறியப்படுகினறது. இருந்தும் இதில் யார் முன்னையவர் என்பது அறியப்பட முடியவில்லை இவர்களுக்குப் பின்னர் இத்தொண்டினை வல்லியப்பர் என்பவர் செய்து வந்ததாக எமக்கு முந்திய பரம்பரையினர் கூறியுள்ளனர் என த.சுந்தரலிங்கமும் திரு ந.சிவரட்ணமும் கூறினர்.

காலப்போக்கில் சூலம் அமைந்த இடத்தைச் சூழவுள்ள பகுதியில் உள்ள மரங்கள் அகற்றப்பட்டு பெருமானுக்கு கொட்டில் அமைக்கப்பட்டு வழிபட்டு வந்ததாகவும் சில காலத்தின் பின்னர் அவ்விடத்தை சுற்றி முருகைக்கற்கள் என அறியப்பட்ட கடலோரத்தில் இருந்த சுன்னாம்புக் கற்களால் ஆன அரண் அமைக்கப்பட்டதுடன் வைரவ மூர்த்தியின் விக்கிரகம் ஒன்றும் நிறுவப்பட்டது.

18ம் நூற்றாண்டளவில் குடிசனத் தொகை அதிகரித்ததுடன் பக்தி பூர்வமான அடியார்களின் சிந்தனையான “கோவிலை மேலும் மேம்படுத்தல்” எனும் சிந்தனையும் மிகுந்தமையால், ஊர்மக்கள் ஒன்று கூடி சுண்ணாம்பு, பனங்கட்டி, சர்க்கரை, குரும்பை ஆகிய பொருட்களைப் பயன்படுத்தி மூலஸ்தானம் அமைத்ததுடன் அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம் போன்றவற்ரையும் அமைத்தனர். இக் கோவிலுக்கான வைரவ மூர்த்தியின் விக்கிரகமும் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டது. இப் பிரதிஸ்டையில் பழைய விக்கிரகத்தை பாலஸ்தானம் செய்து எடுக்கும் பணி நடைபெறும் போது தெய்வாதீனமாக பெருமானது பாதப்பகுதியில் சிறு ஊறு ஏற்பட்டுவிட்டது. இந்நிகழ்வு சம்பந்தமாக பின்வரும் தகவல்கள் அறியப்பட்டுள்ளன.

மேற்கூறியவாறு ஊறு ஏற்பட்ட விக்கிரகத்தை வழிபடுவது அடியார்களுக்கு அபசகுனமாக அமைந்து தீமைகள் விளைவிக்கும் என பெரும்பாலான அடியார்கள் அபிப்பிராயப்பட்டதால் அவ்விக்கிரகம் கடலுடன் சங்கமிக்கப்பட்டது. ஆனால் ஓர் அடியாரின் கனவில் ஊறு கொண்ட சொத்தி வைரவர் என அழைக்கப்படும்,

பழைய வைரவப் பெருமான் கனவில் தோன்றி தன்னையும் இக் கோவிலின் பின் பகுதியில் வைத்து வழிபடுமாறு அருள்வாக்கு கூறியிருந்தார். இதற்கமைய அடியார்கள் அவ்விக்கிரகத்தினை மீட்டெடுத்து புதிதாக அமைக்கப்பட்ட மூலஸ்தானத்திற்கும் நாவல் மரத்தடியில் அமைந்திருந்த ஆரம்ப கால சூலத்திற்க்கும் மேற்குப் புறமாக கோவில் அரணின் உட்பகுதியிலேயே சிறிய கட்டடம் அமைக்கப்பட்டு ஆகம விதிப்படி மீண்டும் அவ்விக்கிரகம் பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன.

இது வைரவப் பெருமானின் அற்புதங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

நாவல் மரத்தினடியில் சூலமாகக்காட்சி தந்த எமது வைரவப் பெருமானை அக்காலத்தில் ஊரவர்களான பெரியவர்களும், சிறுவர்களும் ஆராதித்து வந்தனர். இவ்வாலயம் அப்போதைய காலத்தில் சந்திரன், சின்னவர் போன்றவர்களால் பூஜை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவ்வாலயம் ஆரம்பத்தில் சிறு கொட்டிலாக அமைந்திருந்த இது கிட்டத்தட்ட 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியிருந்து வல்வையின் ஆதி முதல் வைரவக் கடவுளாக ஊரவர்களால் வழிபடப்பட்டார்.

கர்ணபரம்பரைக்கதைகளின் படி ஆரம்பத்தில் இரவு தொடக்கம் அதிகாலை வரையில் வைரவப் பெருமான் கழுத்தில் சங்கிலியுடன் மற்றும் சங்கு, சலங்கைச் சத்தத்துடன் ஊர்மக்களை தீயசக்தி மற்றும் துர்தேவைகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக ஊரைச்சுற்றி வலம் வருவதாக அக்காலத்திலிருந்த எம் ஊர் மக்களால் நம்பப்பட்டது. இதனால் எம்மூர் மக்களை, காவல் தெய்வமாக இருந்து எமது ஊரைக் காப்பாற்றி வரும் வைரவரை குறித்த ஒரு இடத்தில் நிரந்தரமாக இருத்தி வழிபாடாற்றும் பொருட்டு, கிட்டத்தட்ட 17ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்த ஒரு பெரிய நாவல் மரத்தின் கீழ் சூலமாக எமது வைரவப் பெருமானை இருத்தி, ஊர்மக்களுள் சில ஊர்ப்பெரியவர்கள் ஆசார சீலராய் தாமே வைரவப் பெருமானுக்கு பூஜை செய்து வழிபாடாற்றி வந்தனர். தொடர்ந்து சிறுகொட்டிலமைத்து எமது மக்களால் வழிபாடாற்றப்பட்டு வந்தது. இன்னும் சில காலத்தின் பின்னர் இந்தியாவிலிருந்து வைரவருக்கு ஒரு விக்கிரகம் தருவிக்கப்பட்டு அது இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு பண்டாரிகளால் பூஜை செய்யத் தொடங்கப்பட்டது.

இவ் ஊர்ப்பெரியவர்களான சின்னவர் மற்றும் சந்திரன் என்போரே ஆரம்பத்தில் எமது வைரவருக்கு பூஜை செய்தனர். ஆனால் வரலாற்றில் இவர்களுள் யார் முந்தியவர் (முன்னர் பூஜை செய்தவர்) என்பது துரதிஷ்டமாக எமக்கு அறியக்கிடைக்கவில்லை. இவர்களைத் தொடர்ந்து அடுத்த பரம்பரையில் வல்லியப்பர் என்பவரால் இத்திருப்பணி தொடங்கப்பட்டது. இவரது காலத்திலேயே கிட்டத்தட்ட 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வைரவப் பெருமானுக்கு அமைக்கப்பட்ட கொட்டிலைச் சூழ சுண்ணாம்புக் கற்களால் (முருகைக்கல்) கல்வேலி அமைக்கப்பட்டது.

அக்காலப்பகுதியில் இவ் ஆலயத்திற்குரிய தீர்த்தக்கிணறு மூலஸ்தானத்திலிருந்து தென்கிழக்கு நோக்கி கிட்டத்தட்ட 50m தொலைவிலிருந்தது. ஆனால் இது பிற்காலத்தில் சரவணமுத்துச் சம்மாட்டியார் அவர்களால் வாங்கப் பெற்ற காணிக்குள் உள்ளடங்கிவிட்டது. இதன் பின்னர் தீர்த்தக்கிணறானது மூலஸ்தானத்திலிருந்து ஈசான மூலையில் அதாவது தற்போது உள்ள வசந்த மண்டபவாயில் பகுதியில் சீமெந்தால் கட்டப்பட்டது.

ஏறத்தாழ 1805 - 1810ம் ஆண்டுகட்கிடைக்கப்பட்ட காலத்தில் மூலஸ்தானமானது 05 கருங்கற்களால் மேற்படை கட்டப்பட்டு அதன்மேல் தேன், சர்க்கரை, குரும்பை ஆகிய பொருட்கலவையால் மூலஸ்தானம் அமைக்கப்பட்டு பின் மேற்பகுதி சீமெந்தால் பூசப்பட்டு ஏற்கனவே இருந்த வைரவர் சிலை இப்புதிதாக அமைக்கப்பட்ட மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்ட போது மேற்கூறியவாறு அவ்விக்கிரகத்தின் காற்பகுதிகள் சேதமுற்றது. இதனால் அடியவர்களின் அபிப்பிராயப்படி அவ்விக்கிரகம் கடலினுள் எடுத்துச் செல்லப்பட்டு சிங்கமமாக்கப்பட்டது. ஆனால் ஊர்ப்பெரியவரான

வல்லியப்பர் முருகுப்பிள்ளை என்பவரின் கனவில் வைரப்பெருமான் தோன்றி கடலிருந்து மீட்டு தன்னையும் ஆதரிக்கும் படி கேட்டுக் கொண்டார். இவ்விடயம் ஏனைய அடியவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்ட போது நிர்மானிக்கப்பட்ட மூலஸ்தானத்திற்கு பின்புறமாக ஒரு சிறிய, புதிய ஆலயம் அமைக்கப்பட்டு அங்கு மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்ட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது அவ்வாறே பின்னர் இடம்பெற்றது. இவ்வைரவப் பெருமானையும் பக்தி பூர்வமாக வழிபாடாற்றி வந்ததுடன் இவர் சிறப்பாக "சொத்தி வைரவர்" எனவும் அழைக்கப்பட்டார். இவ்விக்கிரகம் தற்போது வசந்த மண்டபத்திற்கு அருகில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று வருகிறது.

காலக்கிரகமத்தில் மீண்டும் புதிய விக்கிரகம் புதிய மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**ஆலய நிர்வாகம் :**

எமக்கு கிடைத்த தரவுகளின்படி, கோவில் நிர்வாகம் தற்போதுள்ள நிர்வாக கட்டமைப்பை போலல்லாது, தானியர் என்ற அமைப்பினூடாக செயற்பட்டு வந்துள்ளது. இதில் ஒருவர் மணியகாரராகவும் (தலைவர்), ஏனையோர் குழு அங்கத்தவராகவும் செயற்பட்டு வந்துள்ளனர். இவர்கள் நம்பிக்கைச் சொத்துப் பொறுப்பாளர்கள் (Trustees) எனச் சட்டபூர்வமாக அறியப்பட்டனர். ஆரம்ப கால கட்டத்தில் சந்திரன் மற்றும் சின்னவர் போன்றோரே செயற்பட்டு வந்தனர். அவர்களைத் தொடர்ந்து வல்லியப்பா தலையிலான குழு செயற்பட்டது. 1880களில் முருகுப்பிள்ளை, சபாபதிப்பிள்ளை, போன்றோரும் கருமமாற்றி உள்ளனர். இவர்களை தொடர்ந்து விஸ்வலிங்கம் தானியப்பா (குண்டப்பா) போன்றோரும் 1920களில் கருமமாற்றி உள்ளனர். இவர்களைத் தொடர்ந்து 1950களில் வைரமுத்து சம்மாட்டியார், சரவணமுத்து சம்மாட்டியார், செல்லைய்யாச் சம்மாட்டியார், திரு மாணிக்கம் ஐயாத்துரை அவர்களும் செயற்பட்டு வந்துள்ளர்.

இருந்தபோதும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் 1963ல் இக்கோவிலுக்குரிய காணி சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டு நடைபெற்ற T56 இலக்க வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு ஆவணத்தில் இருந்து பின்வரும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வழக்கு கீழ்க்காணப்படும் எதிரிகளுக்கு எதிராக அதன் கீழ் விபரிக்கப்படும் வழக்காளிகளால் தொடரப்பட்டதாகும்.

1960களில் ஊரில் ஏற்பட்ட இரு குழுக்களிற்கிடையேயான பிரச்சினையால் கோவில் மூலஸ்தானம் மற்றும் கோவிலை சூழவுள்ள நிலங்களுக்கு சொந்தமானவர்கள் எனக் கருதப்பட்டவர்களால் மக்கள் போக்குவரத்தை தடைசெய்யும் பொருட்டு கோவிலின் வடக்குப் பகுதியும் தெற்குப் பகுதியும் முற்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டன இதனால் கோவிலின் வீதிகளிலோ அவ்வீதிகளின் ஊடாகவோ ஏனைய பகுதிகளுக்கு செல்ல முடியாத நிலை ஏறபட்டது. இவ்வழக்கு எதிரிகளுக்கு சார்கான தீரந்ததாக அறியக் கிடைக்கின்றது ஏனெனில் சட்டப்படி அவர்களுக்கே அது செந்தமாக இருந்தது.

கோவில் சார்பாக மணியகாரர் என்ற ரீதியில் வழக்காளிகளாக
திரு கிருஷ்ணபிள்ளை நாகராஜா
திரு சின்னக்கண்டு தங்கவேலு
திரு அருணாசலம் இராசரத்தினம்

காணிச் செந்தக்காரர்கள் என்ற ரீதியிலும் முற்கம்பி போட்டு வழியை அடைத்தவர்கள் என்ற ரீதியிலும் எதிரிகளாக
திரு ஐயாமுத்து பொன்னுத்துரை
திரு ஐயாமுத்து செல்லையா
திரு செல்லையா நவரத்தினசாமி

இவ்வழக்கு எதிரிகளுக்கு சார்பாக தீர்ந்த போதும் உண்மையில் அந்தக் காணிகளுக்கு சொந்தக்காரர்கள் திரு ஐயாமுத்து செல்லையா, திரு சரவணமுத்து சம்மாட்டியார், மற்றும் வைரமுத்து சம்மாட்டியார் ஆவர்கள்.

மேற்படி நிர்வாகம் 1959 வரை செயற்பட்டதாக அறியக்கிடைக்கின்றது. இக்காலப்பகுதியில் சில குடும்பங்கட்கிடையில் ஏற்பட்ட முரண்பாடானது கோயில் நிர்வாகம் இரண்டாக பிரிபட காரணமாயிற்று. (இப்பிரிவினால் கோவில் அமைந்திருக்கும் இடம் முக்கியமாக மூலஸ்தானப்பகுதி என்பன அடியார்கள் அணுகமுடியாத அளவுக்கு காணித்தகராற்றை ஏற்படுத்தியமையால் நீதிமன்றம் வரை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. (கோவிலுக்குரிய நிலத்திற்கான வழக்கு தொடர்பான தகவல்களை பிறிதொரு பகுதியில் காண்க) இம்முரண்பாட்டுடன் ஏறக்குறைய ஒரு வருட காலப்பகுதி கடந்த நிலையிலும் வல்வை முத்துமாரியம்மன் கோயில் கோபுர கட்டிடத்திற்கான நிதி 12ம் உற்சவகாரர் என்ற வகையில் ஆதிகோவிலடி மக்கள் தமது பங்களிப்பான 1/2 பகுதி செலுத்த வேண்டிநிலை காணப்பட்டது. எனவே இரு பிரிவாக இருந்த குழுக்களும் “அமஞ்சி” என அறியப்படும் முறையின் மூலம் (தொழிலாளர்களிடமிருந்து அவர்களால் கடலிருந்து கொண்டுவரப்படும் மீன்களை, ஒரு குறித்த கால இடைவெளிக்கு ஒரு தடவை பெற்று அதனை விற்பனை செய்தவன் மூலம் கிடைக்கும் நிதி) இரு பகுதியினரும் சேகரித்து ஆதிகோவிலடி மக்களது பங்குக் கோபுர நிதிக்காக வழங்கி வந்தனர். இருந்த போதும் நாளடைவில் இருபகுதியினரும் ஒற்றுமைப்பட்டு புதிய நிர்வாகத்தை 1961ன் ஆரம்பத்தில் தெரிவு செய்தனர். இந்நிர்வாகத்தில் கிழ்வருவோர் இடம் பெற்றிருந்தனர்.

**குறிப்பு :**

இவ் “அமஞ்சி” ஆனதுகுறிப்பிட்ட திருவிழாவை நடாத்துவதற்காக ஊரில் வாழ்ந்த அனைத்து கடற்றொழிலாளர்களும் குறிப்பிட்ட நாளில் கிடைக்கும் அனைத்து வாயினையும் ஒட்டுமொத்தமாக திருவிழாக் குழுவினரிடம் கையளிப்பதாகும். இவ்வாறு அனைத்து கடற்றொழிலாளர்களிடம் இருந்து கிடைக்கும் மீனின் பெறுமதியில் அன்றைய தொழிழிற்கான செலவு கழிக்கப்பட்டு மிகுதி அனைத்தும் தர்மசமயகாரியமான கோவிற் திருவிழாவிற்காக செலவு செய்யப்படும். இவ்வாறு சேகரித்து செலவு செய்யப்படும் நிதியெ “அமஞ்சி” எனப்படும்.

சின்னக்கண்டு தங்கவேல்<br>
கிருஷ்ணபிள்ளை நாகராசா<br>
அருணாசலம் இராசரத்தினம்

இவர்களது நிர்வாகம் 1972 வரை காணப்பட்டது.

ஆதிகோவில் அமைந்துள்ள இடம் சம்பந்தமான வழக்குபற்றிய விபரம்

**ஆதிவைரவர் ஆதன வரலாறு**

காணிப் பெயர் - நிருவத்தம்பைக்கு வடக்குத்திடல்<br>
விஸ்தரணம் - நிபர 1 குளி 7,5/32

தையிட்டியைத் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா என்பவரால் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஐயாத்துரை பொன்னுத்துரைக்கு 1958ம் ஆண்டு மார்கழி மாதம் 12ம் திகதி நொத்தாரிசு க.வ. சுப்பிரமணியம் முகதாவில் 296ம் இலக்கத்தில் முடிந்த உறுதியால் (அறுதியாய்) வரப்பட்டு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஐயாத்துரை பொன்னுத்துரை 1969ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி நொத்தாரிசு க.கு. பாலசுப்பிரமணியம் முகதாவில் 3787 இலக்கத்தில் முடிந்த அறுதியுறுதியால் ஐயாமுத்து செல்லையாவுக்கும் பெண் இராசலட்சுமிக்கும் அறுதியாக விற்றிருந்தார். குறித்த செல்லையாவும் பெண் இராசலட்சுமிக்குரிய ஆதனத்தினை (இராசயலட்சுமி காலமாகிதால்) ஐயாமுத்து செல்லையா தனது பங்கையும் தனக்குரிய தேட்டப்பங்காகிய 1/4 ஐயும் சேர்த்து (ஒரு சேர 3/4 பங்கு) 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 03ம் தகதி நொத்தாரிசு எஸ்.சண்முகசுந்தரம் முடிக்கப்பட்ட 616ம் இலக்க உறுதியால்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொன்னுச்சாமி வைரமுத்து, கணபதிப்பிள்ளை சரவணமுத்து, கந்தசாமி தங்கராசா ஆகியோருக்கு சமபங்காக விற்றிருந்தார். மேற்குறித்த மூவரில் இருவர் (கணபதிப்பிள்ளை சரவணமுத்துவும் கந்தசாமி தங்கராசாவும்) தங்களுக்குரிய பங்கை (3/4ல் 2/3 பங்கை) 1972ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி நொத்தாரிசு இ.இ.தர்மரத்தினம் முகதாவில் 6877ம் இலக்கத்தில் முடிக்கப்பட்ட நன்கொடையுறுதியால் வல்வெட்டித்துறை ஆதிவைரவர் கோவிலுக்கு நன்கொடையாக கையளித்துள்ளார்கள்.

எனவே மேற்குறித்தவாறு தற்போது ஆதிவைரவர் கோவிலுக்கு நன்கொடையாவுள்ள ஆதனத்தில் விஸ்தரணம் நிலம் குளி 12.58 மிகுதி 1/4 பங்கு (முழுவதில்) செல்லையா இராசலட்சியின் பிள்ளைக்குரியது. மிகுதி 3/4 பங்கில் 1/3பொன்னுச்சாமி வைரமுத்துவுக்குடையது.

காணிப்பெயர் - நிருவத்தம்பைக்கு வடக்குத்திடல்
விஸ்தீரணம் - நிபர 1 குளி 7,5/32

சின்னத்தம்பி கந்தையா

அறுதி — 296 / 12.12.1958 — க.வசுப்பிரமணியம்

ஐயாமுத்து பொன்னுத்துரை

அறுதி — 3787 / 13.12.1969 — க.கு.பாலசுப்பிரமணியம்

ஐயாமுத்து செல்லையாவும் பெண் இராசலட்சுமியும்

அறுதி (செல்லையாவின் தேட்டப்பங்குட்பட 3/4) — 616 / 03.12.1970 — எஸ்.சண்முகசுந்தரம்

3/4ல் 1/3 பங்கு — பொன்னுச்சாமி வைரமுத்து

3/4ல் 1/3 பங்கு — கணபதிப்பிள்ளை சரவணமுத்து

3/4ல் 1/3 பங்கு — கந்தசாமி தங்கராசா

நன்கொடை — 6877 / 13.12.1972 — இ.இ.தர்மரத்தினம்

வல்வெட்டித்துறை ஆதிவைரவர் கோவில் (3/4ல் 2/3 பங்கு) குளி 12.58

காளிப்பதிவகத்தின் வரலாற்றுத்தாழிள்படி

**நிர்வாகசபையினரின் வரலாறு**

பருத்தித்துறை நீதிமன்றத்தில் 1963ல் நடைபெற்ற T56 இலக்க வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திலிருந்து பெறப்பட்ட தானியன்மார் பட்டியல்.

(Pedigree showing Devolution of Trusteeship)

தானியன் பதவி வகித்து வந்தவர்களின் பெயர்கள் பற்றிய தோம்பு

| | |
|---|---|
| சின்னவர் அப்பா | (இவர் ஆதிமுதல் பிரதிஸ்டை செய்யப்பட்ட சூலத்தை ஆதரித்து வழிபட்டு தொண்டு செய்தவராக் இருக்கலாம். (இவர் வாழ்ந்த காலம் 18ம் நூற்றாண்டின் முற்பகுதி) |
| ஆத்தார் மாரிமுத்து | (இவர் வாழ்ந்த காலம் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதி) |
| முத்து வேலுப்பிள்ளை | (இவர் வாழ்ந்த காலம் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதி |
| முருகுப்பிள்ளை (சிவலைமுருகர்)<br>பொன்னுச்சாமி | } (இவர் வாழ்ந்த காலம் 19ம் நூற்றாண்டின் முற்பகுதி) |
| போடியார் வைரமுத்து | (இவர் வாழ்ந்த காலம் 19ம் நூற்றாண்டின் முற்பகுதி) |
| கதிரிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை | (இவர் வாழ்ந்த காலம் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி) |
| கதிரிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை<br>உடன்<br>முத்து முருகுப்பிள்ளை | } (1950களில்) |
| மாணிக்கம் ஐயாத்துரை<br>ஐயாத்துரை செல்லையா<br>பொன்னுச்சாமி வைரமுத்து | } (1955களில்) |
| கிருஷ்ணபிள்ளை நாகராஜா<br>சின்னக்கண்டு தங்கவேலு<br>அருணாசலம் இராசரத்தினம் | } (160களில்) |

## Pedigree Showing D̲evolution of Trusteeship.

~~Sixxaxaxappa~~

Sinnavar Appah (1)

suceeded by

Atthar ~~xxxxx~~ Marimuttu (2)

suceeded by

Sinnapillai (3)

Suceeded by

(rector)
Velupillai 4

suceeded by

On witness
1 ~~Thangapillai~~ Selliah P1
2 1st deft.
3 Sellaiyan Retnam
4. Sinnathy for over thirty years

Muruguppillai Ponnuchsamy 5
(Vice...)

suceeded by

Podiar Vyramuttu 6

succeded by

Kathirippillai Sabapathipillai 7

and later jointly with 7A

Muttu Muruguppillai

suceeded by

Maniccam Iyadurai
Iyamuttu Chelliah - 2D
Ponnuchsamy Vyramuttu
} 8 appointed 1955

suceeded by

Krishnapillai Nagarajah 1P
Sinnakandu Thangavelu 2P
Arunasalam Rasaratnam 3D
} 9 appointed 12-2-60, amendment 199, 24-2-63, meeting 12-2-60

Date: 9th day of March 1963. Proctor for Plaintiffs.

**பூசகர்களின் விபரம்**

நாம் ஏற்கனவே கூறியது போல வைரப் பெருமான் எம் ஊரில் குடியமர்ந்த காலப்பதியில் சின்னையா, மற்றும் சந்திரன் என்ற எம் ஊர் மூதாதையர்களின் பூசை, ஆராதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களைத் தொடர்ந்து வல்லியப்ப் எனும் எம் ஊரவரே தொடர்ந்தும் எமது வைரப்பெருமானுக்கான பூஜை, ஆராதனைகளை மேற்கொண்டார். இவர் பூஜை செய்த காலமாக 17ம் நூற்றாண்டு காலப்பகுதியாக வாய்மொழித் தகவல்கள் மூலம் அறியப்படுகிறது. இவர்களை தொடர்ந்து அதாவது சுண்ணாம்பாலான கட்டிடம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து கெருடாவில் கிராமத்தினை பரம்பரையாக வாழ்விடமாகக் கொண்ட அர்ச்சகர்கள் சைவ முறைப்படி, பூஜைகள் ஆராதனைகள் மேற்கொண்டதாக அறியப்பட போதும் 19ம் நூற்றாண்டின் முதற் காலம் வரை சரியான பெயர் விபரங்களை அறியப்பட முடியிவ்லலை.

ஆனால் 1925ற்கு பின்னரான காலத்தில் இப்பரம்பரையைக் சேர்ந்த “பொக்குனி ஐயர்” என பட்டப்பெயர் கொண்ட அர்சச்கரால் 19ம் நூற்றாண்டின் நடப்பகுதி வரையில் பூஜை ஆராதனைகள் மேற்கொண்டது இவரைத் தொடர்ந்து இதே பரம்பரையைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை ஐயரால் 1970 வரையில் பூசைகள் மேற்கொள்ளப்பட்டது. இவரின் பின்னர். இவர்களின் பரம்பரையில் வந்த “சந்திரலிங்கம் செய்யாமையினால், இவரை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே இவரின் பின்னர், பிராமணக் குரக“ளான சபாரத்தினம் செந்தில் நாதக்குருக்களினால் 1986 வரை புறீஜைகள் மேற்கொள்ளப்பட்டது. அதாவது இக்காலத்தில் 23.03.1973ல் செந்தில் நாதக் குருக்களின் தகப்பனார். சபாரத்தினக் குரக்களினால் பாலஸ்தானம் செய்யப்பட்டது.

பின்னர் 21.08.1980ல் (தமிழுக்கு 05.08.1980 ஆவணி மூல நட்சத்திரத்தில்) திருக்குட முழுக்கு கும்பாபிஷேகம் சபாரத்தினக் குருக்களால் செய்து வைக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் 1986ல் செந்தில் நாதக் குருக்களின் பின்னர், கெருடாவிலைச் சேர்ந்த சந்திரலிங்கம் அர்சச்கரால் ஒரு வருடம் பூசை, ஆராதனைக்ள ஆற்றப்பட்டு வந்தது.

1987ம் ஆண்டின் நடுப்பகுதியில் வேதாரண்ய பாலச்சந்திரன் அவர்களால் 1998 வரையில் பூஜைகள் ஆற்றப்பட்டு வந்தது. 1988ல் பாலச்சந்திரக் குருக்களின் தலைமையில் ஸ்ரீ சோமசுந்தரம் தண்டபாணீகதேசிகர் குருக்களினால் அலங்கார உற்சவம் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது 1998 இலிருந்து விக்னேஸ்வரக் குருக்கள் (கண்ணன் ஐயர்) அவர்களால் இன்றுவரை (2016) பூஜைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நிர்வாக சபை அங்கத்தவர்களின் வரலாறு**

இவ்வுலக வழக்கு கீழ்க்காணப்படும் எதிரிகளுக்கு எதிராக அதன் கீழ் விபரிக்கப்படும் வழக்காளிகளால் தொடரப்பட்டதாகும்.

1960 களில் ஊரில் ஏற்பட்ட இரு குழக்களிற்கிடையேயான பிரச்சினைகளால் கோவில் மூலஸ்தானம் மற்றும் கோவிலை சூழவுள்ள நிலங்களுக்கு சொந்தமானவர்கள் எனக் கருதப்பட்டவர்களால் மக்கள் போக்குவரத்ரைத தடை செய்யும் பொருட்டு கோவிலின் வடக்குப் பகுதியும் தெற்குப் பகுதியும் முட்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டன. இதனால் கோவிலின் வீதிகளிலோ அவ்வீதிகளினூடாக ஏனைய பகுதிகளுக்கோ செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இவ்வழக்கு எதிரிகளுக்கு சார்பாக தீர்ந்ததாக அறியக் கிடைக்கின்றது. ஏனெனில் சட்டப்படி அவர்களுக்கே அது சொந்தமாக இருந்தது.

## புனருத்தாரணங்கள்

பல வருடகாலமாக புணருத்தாரண வேலைகள் எதுவும் நடைபெறாமை இருந்தமையை கருத்திற் கொண்டு 1973ம் ஆண்டு 03ம் மாதம் 23ம் திகதியில் பாலஸ்தானம் செய்யப்பட்டு பின்வரும் புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்றன.

மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம், சுற்றுப் பிரகாரம், தீர்த்தக்கிணறு மடப்பள்ளி, மணிக்கூட்டுக் கோபுரம், வெளிமண்டபங்கள் உள்வீதி போன்றவற்றுக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டதுடன் பிள்ளையார், முருகன், ஸ்வானம், பலிபீடம் என்ற மூர்த்திகளுக்கென ஆகம விதி முறைப்படி வைரவப் பெருமானுக்குரிய ஈசான மூலையில் சொத்தி வைரவர் பிரதிஷ்டை செய்யப்பட்டு இக்கைங்கரியங்கள் பூர்த்தியாக்கப்பட்டு 21ம் திகதி 08ம் மாதம் 1980ம் ஆண்டு ஆவணி நட்சத்திரத்தில் கோவிலுக்குரிய கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து 1983ம் ஆண்டு உற்சவ மூர்த்தி செய்யப்பட்டு விஷேட தினங்களில் வீதி உலா வருவது வழக்கமாக இருந்து வந்தது.

1988ம் ஆண்டு ஆடிமாதம் அலங்கார உற்சவம் ஆரம்பிக்கபட்டு 10 உற்சவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்கான உயபகாரர்கள் அடியார்களிடையே திருவிளங்கு சீட்டு முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தீர்ததோற்சவம் ஆடிப் பௌர்ணமி தினத்தன்று நடைபெறுகின்றது.

இதனைத் தொடர்ந்து இக் கோவிலுக்கான அடுத்த புனரமைப்பாக 1989ம் ஆண்டு புதிதாக வசந்த மண்டபம் அமைக்கப்பட்டது. மீண்டும் 2010ஆம் ஆண்டு முதலாம் மாதம் 22ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு முதலாம் மாதம் 24ஆம் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மேற்கூறப்பட்ட சகல புனருத்தாரண பாலஸ்தாபன கும்பாபிஷேக செலவுகள் மற்றும் கட்டட நிர்மாணம் ஆகியவற்றிற்கான நிதிகள் யாவும் இங்குவாழும் ஆதிகோவில் மக்களாலும் புலம்பெயர்வாழ் ஆதிகோவில் மக்களாலும் நல்கப்பட்டன.

### வைரவ சுவாமிக்குரிய உற்சவங்கள், விஷேட தினங்கள் சிறப்பு ஆராதனைகள்

**(அ) அலங்கார உற்சவங்கள்.**

வைரவருக்குரிய அலங்கார உற்சவங்கள் ஆடிமாதம் அனுஸ்டிக்கப்பட்டுகின்றன. அவ்வாறு நடைபெறும் உற்சவங்கள் பின்வருமாறு

1. கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
2. 2ம் திருவிழா
3. 3ம் திருவிழா
4. 4ம் திருவிழா (பாம்புத் திருவிழா)
5. 5ம் திருவிழா (புலிவேட்டை)
6. 6ம் திருவிழா (தண்டிகை)
7. 7ம் திருவிழா (பூதத்திருவிழா)
8. 8ம் திருவிழா [பூங்காவனம் (பகல்) கைலாய வாகனம் (இரவு)]
9. 9ம் திருவிழா (முத்துச்சப்பரம்)
10. 10ம் திருவிழா (தீர்த்தம்)
11. குளுர்த்தி / பிராயச்சித்த அபிஷேகம் (பகல்) - கற்பூரத்திருவிழா (இரவு)

இங்கு பகல், இரவு என இருவேளைகளும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன சுவாமி ஊர்வலங்களும் சிறப்பாக இடம்பெறுகின்றன. இதில் பாம்புத் திருவிழா, புலிவேட்டை, தண்டிகை, முத்துச்சப்பரம் போன்ற இரவுத்திருவிழாக்களும், பூங்காவனம், தீர்த்தோற்சவம் போன்ற சில பகல் திருவிழாக்களும் விஷேடமானவையாகும்.

தீர்த்தத்திருவிழாவின் போது வைரவ சுவாமி பிரதானவீதி ஊடாக சென்று ஊறணி தீர்த்த சமுத்திரத்தில் தீரத்தமாடி பின்பு நெடியகாட்டு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் ஆலயத்தில் தரித்து பின்னர், இரவு

அலங்காரங்களுடன் பக்தர்கள் புடைசூழ தனது இருப்பிடத்தை வந்தடைவார். ஆலயம் **வந்தவுடன் வாசற்பாட்டு** இடம் பெற்று கொடி இறக்கமும் இடம் பெறும்.

அதன் பின்பு பிராயச்சித்த அபிஷேகம் இடம் பெற்று இரவு, பெண்கள் கற்பூரச் சட்டி தலையில் சுமந்த வண்ணம் வலம் வர கற்பூர ஒளியிலேயே வைரவ சுவாமி வீதியுலாவருவார்.

### ஆலயத்தில் இடம் பெறும் நித்திய பூசை நேரங்கள்.

1. உதயப்பூசை (காலை 6.30 மணி)
2. உச்சிக்காலப் பூசை (மதியம் 12.00 மணி)
3. மாலைப் பூசை (இரவு 7.00 மணி)

## விஷேட தினங்களும் திருவிழாக்களும்

### 1. சித்திரை

1. சித்திரை வருடப்பிறப்பு (அபிஷேகம்)
2. சித்திரபுத்த நாயனார் விரதமும் அவருடைய பாடல் படிப்புகளும்
3. சித்திரைப் பரணி உற்சவம்

### 2. வைகாசி

1. வைகாசி மாதப் பிறப்பு பூசை

### 3. ஆனி

1. ஆனி உத்தரப் பொங்கல்

குறிப்பு : இவ்விஷேட தினத்தன்று கோவில் வாசலில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் மாலை நேரத்தில் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு பொங்கல் பொங்கி மகிழ்வர். இப் பொங்கல்கள் பூர்த்தி அடையும் பொழுது இருள் சூழ்ந்திருக்கும். நேர்த்திக் கடன்களில் பூஜையின் இறுதிக் கட்டமாக கடலிலேயே வைத்து விஷேடமாக உருவாக்கப்பட்ட ஒரு சிறிய கட்டுமரத்தில் (பாயுடன் கூடியது) வைரவப் பெருமானின் நிவேதனங்கள் படைக்கப்பட்டு அந்தணரின் பூஜை ஆசீர் வாதங்களுடன் கற்பூரத் தீபம் ஏற்றப்பட்டு சமுத்திரத்திலேயே விடப்படும்.

### 4.ஆடி

1. ஆடி மாதப் பிறப்பு பூசை
2. அலங்கார திருவிழா (பிராயச்சித்த உற்சவம்)

### 5. ஆவணி

1. மாதப்பிறப்பு பூசை
2. விநாயகர் சதுர்த்திப் பூசை

### 6. புரட்டாதி

1. மாதப்பிறப்பூசை

### 7. ஐப்பசி

1. மாதப்பிறப்பு பூசை
2. தீபாவளி (விசேட பூசை)
3. கந்தசஷ்டி பூசை (06 நாட்கள் பாரணை பூசையுடன் முடிவடையும்)

ஐப்பசிப் பரணி உற்சவம்

**8. கார்த்திகை**

1. மாதப்பிறப்பு பூசை
2. விசேட திருக்கார்த்திகைப் பூசை - விளக்கீடு உற்சவம், வாழை வெட்டுதல் சொக்கப்பானை எரித்தல்

**9. மார்கழி**

1. மாதப்பிறப்புப் பூசை
2. விநாயகர் சஷ்டி விரதப் பூசை
3. திருவெம்பா காலைப் பூசைகள்
4. திருவாதிரை உற்சவம் விசேட பூசை
5. மார்கழிப் பூசையும் இடம்பெறும்

**10. தை**

1.மாதப்பிறப்பு தைப்பொங்கல் பூசை
2. தை உத்தரம் கும்பாபிஷேக தினம் சங்காபிஷேகம் மணவாளக் கோலம் இடம்பெறும்
3. தைப்பூச உற்சவம்

**11. மாசி**

1. மாதப் பிறப்பு பூசை
2. மாசி மகப் பூசை

**12. பங்குனி**

1. மாதப்பிறப்புப் பூசை

### வைரவ சுவாமியின் அலங்கார திருவிழாக்காலங்களுக்குரிய வாகனங்கள்

1. இந்திர விமானம்
2. தண்டிகை
3. இரத்தின பீடம்
4. முத்துச் சப்பரம்
5. நாய் வாகனம்
6. வேட்டை நாய்
7. பாம்பு வாகனம்
8. மலர்ப்பாம்பு வாகனம்
9. பசு
10. சிங்கம்
11. பூதவாகனம்
12. கைலாச வாகனம்
13. கிளி
14. சகடை (சிறு ஊர்தி)

**மண்டபங்கள்**

1. வாகன சாலை
2. மின்னமைப்புப் பணி அறை

### தலவிருட்சம்

ஆலயத்திற்குரிய தலவிருட்சமாக கருதப்பட்ட நாவல்மரம் முன்னைய காலத்தில் கும்பாபிஷேக புனருத்தாரண பணிகளுக்காக அழிக்கப்பட்டு கோவில் கட்டடம் அமைக்கப்பட்டது

### சொத்து விபரம் (ஆலயத்தின் ஆதனம்)

ஆலயத்தின் அருகாமையில் இருக்கும் காணிகள் ஆலயத்தின் சொத்துக்களாக (ஆதனமாக) விளங்குகிறது. மேலும், பல வழக்குகளின் பின் தற்போது 2017ம் ஆண்டு ஆலயம் அமைக்கபட்டுள்ள இடமும் சுற்றுப்புற வீதிகளும் இவ்வாலயத்தின் ஆதனங்களாக கொள்ளப்படுகின்றது

### ஏனைய சிறப்பு மிகு நிகழ்வுகளுள் சில...

வல்வெட்டித்துறையிலுள்ள ஆலயங்களுடன் வைரவப் பெருமான் சங்கமிக்கும் விசேட நிகழ்வுகள் (தரிசனங்கள்)

வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி வல்வை வைத்தீஸ்வர ஆலயத்திலிருந்து கொடியேற்றதிற்கு முன் நாளில் மாணிக்கவாசகசுவாமி எமது ஆலயம் நோக்கி வருகை தந்து தரிசனம் செய்து அருள்பாலிப்பார்.

இதே போன்று வல்வை ஸ்ரீ முத்தமுாரி அம்மன் கொடியேற்றத்திற்கு ஒரிரு தினங்கள் முன்பாக காத்தலிங்க சுவாமி ஆலயம் நோக்கி வருகை தந்து தரிசனம் செய்து அருள்பாலிப்பார்.

கப்பலுடைய பிள்ளையார் தெற்பத் திருவிழாவின் போது சிறப்பாக அமைக்கப்பட்ட தெற்பத்தில் ஆதி வைரவர் நோக்கி கடல் வழியாக வருகை தந்து சமுத்திரத்திலேயே அமைக்கப்பட்ட விசேட தெப்பத்தில் வைரவ அடியார்கள் அதில் இருந்தபடியே அவரை வரவேற்று அர்ச்சனை செய்து வழிபட்டு அனுப்பி வைப்பது வழக்கம்.

நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொடியேற்ற திருவிழாவிற்கு ஓரிரு தினங்களிற்கு முன்பு ஊருலா வரும் நம்பியாண்டார் நம்பி எமது ஆலயம் நோக்கி வருகை தந்து தரிசனம் செய்து அருள் பாலிப்பார்.

அத்துடன் 06ம் திருவுலாவான வேட்டை திருவிழா அன்று திருச்சிறம்பலப் பிள்ளையார் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் வேட்டையாடி அம்பாளையும் தரிசித்து வல்வை வைத்தீஸ்வரனை தரிசனம் செய்து அவருடைய இருப்பிடம் நோக்கி புறப்பட்டுச் செல்லும் முன் எமது ஆலயம் நோக்கி வருகை தந்து தரிசனம் செய்து அருள்பாலிப்பார்.

மேற்குறிப்பிட்ட விபரங்களை எமது ஆலய பரிபாலனசபை அங்கத்தவர்களும், தற்பொழுது எம்முடன் வசித்து வரும் முதியவர்களும், மற்றும் இவ் விடயத்தில் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளைக் கொண்ட ஒரு தொகுப்பு குழுவினர் இணைந்து தயாரித்து சமர்ப்பிக்கின்றனர்.